# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 14573/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** திரு . சிவ தியாகராாசன்
41, சிந்தாதரிபேட்டை தெரு
போளூர் 606 803

**பொது அதிகார அமைப்பு:** பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர்
சேத்துப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம்

......

மனுதாரர் . சிவ தியாகராாசனும் பொது அதிகார அமைப்பின் சார்பாக கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலக பொதுத் தகவல் அலுவலரும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 5.11.08 அன்று 11 இனங்களில் தகவல் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மனுதாரருக்கு 21.11.08 அன்று 11 இனங்களுக்கும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. மனுதாரர் 21.6..09 அன்று இவ்வாணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனுவின் அடிப்படையில் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் ஒரு சில இனங்களுக்கு தகவல்கள் தரப்படவில்லை என்று மனுதாரர் தெரிவித்தார். மனுதாரர் கொடுத்த மனு ஒவ்வொரு இனமாக விசாரிக்கப்பட்டது. விசாரணையில் ஒரு சில நடவடிக்கைகளுக்கு சம்மதிக்கிறீர்களா என்றும் இன்னும்

எவ்வளவு நாளில் வழங்க உள்ளது என்பது போன்ற சில தகவல்களைக் கேட்டுள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவரிடம் விசாரித்த போது ஒரு சில விவரங்கள் தரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் இல்லை என்பதால் தரப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இனம் 7 க்கு மனுதாரர் வைப்பு நிதித் தொகைக்கான கணக்கு சீட்டினை 1981/82 முதல் 2007/08 வரை கணக்கு விவரம் அளிக்கும்படி கேட்டுள்ளார். இது குறித்து கீழ்க்கண்ட் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் கேட்டுள்ள வைப்பு நிதித் தொகைக்கான கணக்கு சீட்டினை விடுபட்ட 1981/82 முதல் 2003/04 வரையிலான ஆண்டு விவரங்களை இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**
**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

உதவிப் பதிவாளர்

பொதுத் தகவல் அலுவலர்
கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர்
சேத்துப்பட்டு,
திருவண்ணாமலை மாவட்டம்

திரு . சிவ தியாகராாசன்
41, சிந்தாதரிபேட்டை தெரு
போளூர் 606 803
திருவண்ணாமலை மாவட்டம்